23rd October 1971]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பஞ்சாயத்துக்களில் தீர்மானம் போட்டு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. சில பஞ்சாயத்து யூனியன்கள் எங்கள் பகுதிக்குத் தேவையில்லை என்று தீர்மானம் போட்டு அனுப்பினால், அவற்றிற்குத் தெளிப்பதில்லை. சொந்தத்தில் பஞ்சாயத்தின் மூலமாக பவர் ஸ்ப்ரே, ஹாண்ட் ஸ்ப்ரே மூலமாக அவர்களாகவே மருந்து வாங்கித் தெளிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Tractors

* 22. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of R.S. 09 Tractors allotted by the State Trading Corporation of India to Tamil Nadu;

(*b*) the number of Tractors sold; and

(*c*) whether any complaints have been received about their defective working?

டிராக்டர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்திய அரசு வாணிகக் கழகம் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கீடு செய்த R. S. 09 டிராக்டர்களின் எண்ணிக்கை என்ன?

(இ) விற்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை என்ன?

(உ) அவை செயல்படுவதில் குறைபாடுகள் இருப்பதாகப் புகார்கள் எவையேனும் பெறப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) நூறு.

(இ) பதினாறு.

(உ) ஆம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : வரவழைக்கப்பட்ட சோஷலிச டிராக்டர்கள் 100 ஒதுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்த 100-ஐயும் அரசு விலைக்கு வாங்கியதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, 100-ஐயும் வாங்க நம்மை மத்திய அரசு அனுமதிக்கவில்லை. யாரும் அதை வாங்காத காரணத்தால், அவை அப்படியே இருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : அதற்கான தொகையை அரசு கொடுத்து விட்டதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இன்னும் இல்லை.

[23rd October 1971

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : கிழக்கு ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்ட டிராக்டர்களுக்கு என்ன பெயர்? உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஏதோ சோஷலிச டிராக்டர் என்று சொன்னதாகத் தெரிகிறது. அப்படி ஏதாவது பெயர் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதற்கு ஆர்.எஸ். 09 டிராக்டர் என்பது பெயர், 20 ஹார்ஸ் பவர் உள்ளது,

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த டிராக்டர்கள் உற்பத்தி செய்த முறையிலேயே கோளாறு இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. 16 டிராக்டர்கள் விற்றதால், விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு மத்திய அரசு பொறுப்பா அல்லது மாநில அரசு பொறுப்பா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நம்முடைய சிபாரிசின் பேரில்தான் மத்திய அரசு மாநில அரசிற்கு டிராக்டர்கள் ஒதுக்குகிறது. ஆனால் இந்த டிராக்டர்கள் உபயோகப்படுத்துவதற்கு முன்னாலேயே இது சரியாகயில்லை என்று சொன்ன காரணத்தினால், ஏதோ ஒரு மிரட்சி ஏற்பட்டு ஆங்காங்கு வாங்காமல் நிறுத்திவிட்டார்கள். ஹரியானா பகுதியில் அவை சாலைகளில் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தகவல் வந்தது. உடனே நம்முடைய மாநிலத்திலுள்ள விவசாயிகளும் அதைக் கேட்டு தங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். பயன்படுத்தாமலேயே அவை நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

THIRU A. R. DAMODARAN : From the Hon. Minister's answer, there seems to be a feeling that these tractors could be put to use. May I know whether, in view of the fact that he feels that these tractors could be put to use, these 16 tractors sold to the unfortunate farmers will be withdrawn and they be reimbursed and they will be kept for use in State Seed Farms, Sir?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றுமில்லை. வாங்குகிற மாதிரி இல்லை.

Strike

* 23. *Q.* THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the loss incurred by the Electricity Board as a result of the lightning strike resorted to by the Engineers of the Tamil Nadu Electricity Board on 20th May 1970; and

(*b*) the action taken against the staff who resorted to the strike without any prior notice?